சுருக்கம்

**பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள் மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான அமர்வுப்படி ( sitting fees) வழங்குதல் - திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது.**

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் ) துறை**

**அரசு ஆணை (டி) எண்.213** **நாள் : 21-5-99**

**படிக்க :**

அரசு ஆணை (டி) எண் 712, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல் ) துறை நாள் 21.11.1996.

**மீண்டும் படிக்க :**

நகராட்சி நிர்வாக ஆணையரின் நேர்முக கடித எண் 79476/96/ எல்.3/ நாள் 1.12.93.

**ஆணை:-**

பார்வையில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கு மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாட்களுக்கு கீழ்க்கண்டவாறு அமர்வுப்படி ( sitting fees) வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| பேரூராட்சிகள் | : ரூ. 50/- |
| நகராட்சிகள் | : ரூ. 75/- |
| மாநகராட்சிகள் | : ரூ. 100/- |

மேற்கூறிய அமர்வுப்படி ஒரு மாதத்தில் அதிகபட்சமாக மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ள மட்டுமே வழங்கப்படும் என்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச்

சொந்தமான வாகனங்களை பயன்படுத்தும் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களுக்கு இந்த சிறப்பு அமர்வுப்படி வழங்கப்படமாட்டாது எனவும் ஆணையிடப்பட்டது.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கு மன்றக் கூட்ட எண்ணிக்கையை பொருட்படுத்தாது மாதந்தோறும் முறையே ரூ.150 /-, ரூ.250/- மற்றும் ரூ.300/- அமர்வுப்படி வழங்குமாறு கோரியுள்ளார்.

3. அரசு நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை கவனமாக ஆராய்ந்து அனைத்துப் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களுக்கு மன்ற கூட்ட எண்ணிக்கையை பொருட்படுத்தாது மாதந்தோறும் கீழ்க்கண்டவாறு அமர்வுப்படி ( sitting fees) வழங்க அரசு ஆணையிடுகிறது:-

| | |
|---|---|
| பேரூராட்சிகள் | : ரூ. 150/- |
| நகராட்சிகள் | : ரூ. 300/- |
| மாநகராட்சிகள் | : ரூ. 500/- |

4.ஏற்கனவே ஆணையிட்டபடி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான வாகனங்களை பயன்படுத்தும் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களுக்கு இந்த சிறப்பு அமர்வுப்படி வழங்கப்படமாட்டாது எனவும் இந்த அமர்வுப்படி வழங்குவதற்கான செலவினை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே ஏற்க வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடும் தேதியிலிருந்து அமலுக்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ். மாலதி,
அரசு செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை - 5.
பேரூராட்சி இயக்குநர், சென்னை- 108
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (மேயர் மூலமாக)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்,
அனைத்து நகராட்சி ஆணையர்கள் (தலைவர் மூலமாக)

(அரசு ஆணை (டி) எண்.213, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
நாள் 21.5.99ன் தொடர்ச்சி)

அனைத்து பேரூராட்சி உதவி இயக்குநர்கள்
இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள், சென்னை -108
ஆணையர், கருவூல கணக்குகள், சென்னை -15
தகவல்-முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9
நகர வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை.9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி 5, பேரூ.1,மாந.1 மற்றும் 2)துறை,
சென்னை- 9.

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
21/5/99